Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
*An ISO 9001 : 2015 Company*

Tiaano® since '92
Innovation In Inert Metals

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2017-2018

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Oct.17 : 1067 Nos.
  - Up to Sep.17 : 1058 Nos.
- **Performance Oct. 17 …**
  - Turnover growth : 17.45%
  - Employment growth : 0.70%
  - 100% Attendance : 9.85%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano® Innovation In Inert Metals – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil Results for environment – Water Treatment Equipments.

HydroGen™ Go Green – HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Tiaano Vidyashram (CBSE Curriculum)




### வளர்ச்சிக்கான விதை

கடமையை உணர்ந்திடு! காலத்தில் செய்திடு. வாழ்க்கையில் வளர வேண்டும், முன்னேற வேண்டும் என்ற ஆசை நம் எல்லோருக்கும் இருக்கின்றது. ஆனால் நம்மில் பலர் என்ன சொல்வார்கள் என்றால் நம் வளர்ச்சி நம் கையிலா இருக்கின்றது என்று, அங்கே தான் தன்னுடைய வளர்ச்சிக்கு தடை கற்களை போடுகின்றார்கள் என்பது உண்மை. வளர வேண்டும் என்று நினைத்த உடனேயே நம் குறைகளை சுற்றியே நம் ஞாபகங்கள் வட்டமிடும். வளர்ச்சி மேல் ஆசை வைத்து தோல்வியை தேடிப் போகின்ற கதையாகி விடும். வளர்ச்சிக்கான முயற்சி என்பது விழித்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் முயற்சியை நோக்கிய பயணமாக இருக்க வேண்டும்.

முட்கள் சூழ்ந்திருந்தாலும்! இதழ் விரித்து சிரிக்கும் ரோஜாவை போல வாட்டி வதைக்கும் சூழ்நிலைக்கு மத்தியிலும் தன்னுடைய பலமும், தனித்தன்மையும் குறையாதவாறு சோர்ந்து போகாமல் பாலைவனத்து மான் போல் அலைந்து ஒரு சோலைவனத்தை காணும் போது அந்த வெற்றியே எவ்வளவு பெரிய வளர்ச்சி என்பதை நாம் அனைவரும் அறிந்த உண்மை.

இறையன்பு, நேர்மை, உண்மை, தன்னம்பிக்கை இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து நம்மை இன்னும் முன்னேற்றப் பாதையில் செல்ல வழி வகுக்கும். வண்டிக்கு எப்படி இரு சக்கரம் தேவையோ அதே போன்று தான் முதலாளி, தொழிலாளி என்ற இரு சக்கரமும் இணைந்து பாடுபட்டால், நாம் செய்கின்ற தொழிலில் முன்னேற்ற பாதையில் செல்வோம். வெற்றிகள் பல பெறுவோம். எந்த வேலையில் கை வைத்தாலும் நான் வெற்றி பெறுவேன் என்று சொல்லி வளர்ச்சி பாதையில் முன்னேறுவோம். ஒவ்வொரு நாளும் பொழுது விடிந்ததும் அதை நல்ல பொழுதாக நாம் கடந்து செல்வதற்கான செயல்களில் ஈடுபடுவோம்.

வளர்ச்சிப் பாதையிலான பயணத்தில் உண்மையும் நேர்மையும் உழைப்பும் தான் முதலீடு என்று சொல்லி முட்டி உடைத்து வளர்ச்சிப் பாதையில் வாழ்க்கையில் முன்னேறுவோம். கடமையினை உணர்ந்து சரியான கால கட்டத்தில் சரியான பாதையில் செல்வோமேயானால் எந்நாளும் நமக்கு பொன்னாள் ஆகும்.

Compiled by: Ms.P.E Nancy
Director Admin

### அப்துல்கலாமின் பொன்மொழிகள்

1. கனவு காணுங்கள், திட்டமிடுங்கள், செயல்படுங்கள்.
2. கனவு காண்பவர்கள் அனைவருமே தோற்பதில்லை. கனவு மட்டுமே காண்பவர்கள் தோற்கிறார்கள்.
3. சிந்திக்க தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை. துன்பங்களை சந்திக்க தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.
4. உன் கை ரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே. ஏனென்றால் கையே இல்லாதவனுக்கு கூட எதிர்காலம் உண்டு.
5. ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல, உன்னைப் போல சந்திக்க துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே…
6. சிக்கல்களை எதிர் கொள்ளும் போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.
7. நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

\- Dr. A.P. J. Abdul kalam

## FUNCTIONAL WISHES




**Merry Christmas**
**(25th December)**

**Best Wishes from Tiaano Employees**

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.



Mrs.Vijaya Nirmala.R — 7th Dec.
*Coating*

Mr.Purushothaman.S — 10th Dec.
*Production*

Mr.Jeyakumar. V.P — 12th Dec.
*Managing Director*

Mr.Murugan.G — 14th Dec.
*Security*

Mr.Mohan Babu. V. D — 16th Dec.
*Marketing*

Mr.AjmalMohamed.H.D — 30th Dec.
*Production*

**Best Wishes from Tiaano Employees**

## Life

- Life is an opportunity, benefit from it.
- Life is beauty,admire it.
- Life is a dream, realize it.
- Life is a Challenge,meet it.
- Life is a duty, Complete it.
- Life is a game, Play it.
- Life is a promise, Fulfill it.
- Life is so sorrow, overcome it.
- Life is a song, sing it.
- Life is a struggle,accept it.
- Life is a tragedy,confront it.
- Life is an adventure, dare it.
- Life is Luck, make it.
- Life is too precious, do not destroy it.
- Life is Life, Fight for it.

*Mother Teresa.*

## கான்:ஃபிடன்ஸ் கார்னர்

கால்பந்து மைதானத்தில் இரு நாடுகளுக்கிடையே போட்டி. அரங்கம் நிரம்பி வழிந்தது. இரு அணிகளும் மாற்றி மாற்றி கோல் போட்டு கொண்டிருந்தன. இருவர் வெற்றிக்கும் ஒருவர் ஆர்ப்பரித்து கைதட்டி ஊக்குவித்து கொண்டிருந்தார். அவர் எந்த நாட்டை ஆதரிக்கிறார் என்பதில் கூடியிருந்தவர்களுக்கு குழப்பம். அவரிடமே கேட்டார்கள்.

அவர் சொன்னார், “நான் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவன். நாடு என்கிற எல்லை எனக்கில்லை. மனிதகுலம் தன் திறமையை எங்கெல்லாம் வெளிப்படுத்துகிறதோ அங்கெல்லாம் நான் இருக்கிறேன். அவர்களைப் பாராட்டுவதன் மூலம் என்னையே பாராட்டிக் கொள்கிறேன்”என்றார். அவர் கடவுள் என்பதை யாரும் அறியவில்லை.

மனிதனின் திறன் வெளிப்படுவதே கடவுளின் தரிசனம்.

–கான்:ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

### The Obstacle in Our Path

There once was a very wealthy and curious king. This king had a huge boulder Placed in the middle of a road. Then he did nearby to see if anyone would try to remove the gigantic rock from the road.

The first people to pass by were some of the king's wealthiest merchants and courtiers. Rather than moving it, they simply walked around it. A few loudly blamed the king for not maintaining the roads. Not one of them tried to move the boulder.

Finally, a peasant came along. His arms were full of vegetables. When he got near the boulder, rather than simply walking around it as the others had, the peasant put down his load and tried to move the stone to the side of the road. It took a lot of effort but he finally succeeded.

The peasant gathered up his load and was ready to go on his way he saw a purse lying in the road where the boulder had been. The peasant opened the purse. The purse was stuffed full of gold coins and a note from the king. The king's note said the purse's gold was a reward for moving the boulder from the road.

The king showed the peasant what many of us never understand, every obstacle presents an opportunity to improve our condition.

Compiled by : Mrs. K.N. Shahzaddhe Begam
Marketing.

### ஒன்றும் இல்லை

மாவீரன் அலெக்ஸாண்டர் தனது சவப்பெட்டியைத் தயாரிக்கும் நேரம் வரும் போது தனது கைகள் இரண்டும் வெளியே தெரியும் படி அமைக்குமாறு கட்டளையிட்டார். அதற்குக் காரணமும் சொன்னார்.

உலகையே வென்ற அலெக்ஸாண்டர் உலகை விட்டுப் போகும் போது தன்னுடன் எடுத்து போனது எதுவும் இல்லை என்று உலக மக்கள் உணரட்டும்.

–திருச்சிராப்பள்ளி ஸ்ரீஜயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## தெரிந்து கொள்வோம்

**சோளத்தின் மருத்துவ பயன்கள்**

- சோளத்தில் அதிகளவு மாவுசத்து, நார்ச்சத்தும் அடங்கியுள்ளதால் இது ஒரு சக்தி தரும் உணவாக திகழ்கிறது.
- குலூட்டான் எனும் வேதிப்பொருள் சோளத்தில் இல்லாத காரணத்தால் கோதுமை ஒவ்வாமை உள்ளவர்களும் சோளத்தை சாப்பிடலாம்.
- கோதுமையில் உள்ள புரதத்தை விட சோளத்தில் உள்ள புரதம் சிறப்பு வாய்ந்தது.
- சோளத்தில் அதிக அளவு நார்சத்து உள்ளதால் இது மலச்சிக்கலுக்கு ஏற்ற உணவாகவும் உள்ளது.
- நீரழிவு நோயை குறைக்கும் தன்மைக் கொண்டதால் நீரழிவு நோய்களுக்கு சிறந்த உணவாகும்.

**முளைக்கட்டிய தானியத்தில் கிடைக்கும் நன்மைகள்**

- பச்சைப்பயறு, கொண்டைக்கடலை, வெந்தயம், எள்ளு, வேர்க்கடலை, சூரியகாந்தி விதை, வெள்ளரி விதை, கொள்ளு மற்றும் கறுப்பு உளுந்து போன்ற தானியங்களை வீட்டிலேயே முளைக்கச் செய்து சாப்பிடுவதன் மூலம் ஆரோக்கியத்தையும் அளவற்ற சக்தியையும் பெற முடியும்.
- இந்த தானியங்களை நன்றாக கழுவி 8 மணி நேரம் ஊற வைத்து பின் ஈரமான பருத்தி துணியில் சுற்றி வைத்து விட்டால் 8 – 10 மணிக்குள் தானியம் முளைவிட்டு இருக்கும். இந்த தானிய உணவானது ஆரோக்கியத்தை அள்ளித் தரும் மலிவான உன்னதமான உயிர் உணவு.
- இந்த உணவின் மூலம் புரதம், கால்சியம், சோடியம், இரும்புத்தாது, பொட்டாசியம் மற்றும் பாஸ்பரஸ் போன்றவைகள் கூடுதலாக கிடைப்பதுடன் வைட்டமின் ஏ, பி1 மற்றும் பி2 போன்றவையும் அதிகமாக கிடைக்கிறது.
- முளைவிட்டகோதுமை சாப்பிட்டால் புற்று நோய் மட்டுப்படும்.
- முளைவிட்ட கறுப்பு உளுந்து தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கும்.
- முளைவிட்ட கொள்ளு சாப்பிட்டால் உடல் பருமன் குறையும். முளைவிட்ட எள்ளு சாப்பிட்டால் உடல் எடை அதிகரிக்கும். மேலும் கண் பார்வை அதிகரிக்கும்
- எந்தவித நோய்களும் வராமல் தடுக்கும் சக்தி இந்த முளைவிட்ட தானியங்களுக்கு உண்டு.

*Collected From Internet.*

**தொழில் முனைப்பில் போட்டிகளைச் சமாளிப்பது எப்படி என்பது குறித்தான சில சிந்தனைகள் இங்கே:**

- நம்முடைய பொருள் மற்றும் சேவை குறித்த சரியான தெளிவும் பார்வையும் முதலில் நமக்கு இருத்தல் வேண்டும்.
- நம்முடைய பொருள் மற்றும் சேவை போலவே சந்தையில் இருக்கும் மற்ற போட்டியாளர்களின் பொருட்கள், சேவைகள் என்ன என்கிற அறிவு இருக்க வேண்டும்
- புதிய சிந்தனையில், புதிய வடிவத்தில் பல புதுமைகளை நாம் சந்தையில் அறிமுகம் செய்ய வேண்டும்.
- நமது போட்டியாளர்களை விடவும் எவ்வாறு சிறப்பாகச் செயல்பட முடியும் என்ற சிந்தனை எப்போதும் வேண்டும்.
- நம்முடைய வாடிக்கையாளர்களின் பலம் என்ன, பலவீனம் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.
- நமது வாடிக்கையாளர்கள் யார், அவர்களின் தேவை என்ன, அவர்கள் வாங்கும் முறைகள் என்ன என்று தெரிந்திருத்தல் வேண்டும்.
- வாடிக்கையாளர்களின் முதல் தேர்வாக நாம் இருக்க வேண்டும் என்பதற்காக உழைக்க வேண்டும்.
- நம்முடைய போட்டியாளர்களை விடவும் பல மடங்கு உழைப்பும், தொழில் முனைப்பின் மீதான ஈடுபாடும், உத்வேகமும் எப்போதும் வேண்டும்.
- நம்மை நம்பி வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த ஒன்றைத் தவிர வேறெதையும் நான் தர மாட்டேன், அவர்கள் கொடுக்கும் விலைக்கு அதிகமான பலனை அவர்களுக்கு திருப்பி கொடுப்பேன் என்கிற எண்ணம் வேண்டும்.
- தவறான, அறம் சாராத வழிகளில் போட்டியாளர்களை வீழ்த்தாத எண்ணம் வேண்டும்.

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி LXVI)

**உலகம் என்பது கட்டங்களின் தொகுப்பு**

சிறிது நேரத்திற்குப் பிறகு, இரண்டாவது வீட்டை சேர்ந்தவர் வருவார். அவர் வீட்டில் ஏற்கெனவே நிறைய குப்பை இறைந்திருக்கும். கூடவே, முதல் வீட்டுகாரர் தள்ளி விட்ட ‘எக்ஸ்ரா’ குப்பைகளும் குவிந்து கிடக்கும்.

‘சோம்பேறி’ என்று முதல் வீட்டுக்காரரைத் திட்டியபடி, அவர் தனது சுத்தப்படுத்தும் பணியைத் தொடங்குவார். சிறிது நேரத்திற்குப் பிறகு, அவரிடமும் நிறைய குப்பைகள் சேர்ந்து விடும்.

இப்போது அவருக்கு, எல்லாக் குப்பைகளையும் முதல் வீட்டின் பக்கமாகத் தள்ளி விட வேண்டும் என்று தான் ஆசையாக இருக்கும். என்றாலும், அந்த வீட்டுக்காரன் சரியான முரடன், அவனிடம் யார் உதை வாங்குவது என்று பயமாகவும் இருக்கும்.

ஆகவே, அவர் என்ன செய்ய வேண்டும்? இரண்டு வீட்டுக் குப்பைகளையும் சேர்த்து, குப்பைத்தொட்டிக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் அவர் அதை செய்யமாட்டார்.

## கவிதைகள்

### வெற்றி

நிலா தேய்வதால் வானம்
வருத்தப்படுவதில்லை.
பூக்கள் உதிர்வதால் செடிகள்
புலம்புவதுமில்லை.
மழையில் நனைவதால் மரங்கள் குடை
பிடிப்பதுமில்லை.
மதங்கள் வேறுபடுவதால் மனிதம்
மாறுவதுமில்லை.
நம்பிக்கை தொடர்வதால் தோல்வி
வெற்றியின் வேரறுப்பதுமில்லை.
உழைத்து வாழ்வதால் வாழ்வில்
வறுமை வீசுவதுமில்லை.

*Collected From Internet*

## ஹைக்கூ

ஆயிரம் தடவை உன் வாழ்க்கை
உன்னை அழ வைத்தால்
ஆயிரம் வழிகளில் நீ சிரிப்பதற்கு வழி தேடு.

*Collected From Internet*

## சிந்தனைக்கு

1.வேலைகள் அதிகமாக குவியும் போது புத்தியை நிதானமாக வைத்திருங்கள்.

2.பல முயற்சிகள், யோசனைகள், கற்பனைகள் எல்லாம் அவசியம் தான். ஆனால் நடைமுறையில் என்ன சாத்தியம் என்பதை மனத்துக்குள் ஒரு மதிப்பீடு செய்யுங்கள்.

3.மாறுகிற சூழல், புதிய புதிய தகவல்கள் ஆகியவற்றை ஏற்று அதன்படி செயல்பட ஒரு போதும் தயங்காதீர்கள்.

4.எந்த ஒரு ஆலோசனையையும் உடனடியாக ஏற்கவோ, நிராகரிக்கவோ செய்யாதீர்கள். நிதானமாய் எடை போட்டு உரிய காலத்தில் முடிவெடுங்கள்.

*Collected From Internet*

பணியாளர்கள் மற்றும் பணியாளர்
களின் குடும்பத்தாரிடமிருந்து
கவிதைகள், கட்டுரைகள், கதைகள்
வரவேற்கப்படுகிறது.
– Editor

அவருக்கும் சோம்பேறித்தனம் தான் என்றாலும், ‘எவனோ எனக்கு செய்ததை, நான் மற்றவர்களுக்குச் செய்கிறேன்!’ என்ற குரூரமான நியாயத்தின் சாயத்தை அதற்குப் பூசி, எல்லாக் குப்பைகளையும் மூன்றாவது வீட்டு வாசலில் தள்ளி விடுவார்.

இப்படியே மூன்றாவது வீட்டுக்காரர் நான்காவது வீட்டில் குப்பைகளைத் தள்ள, நான்காவது வீட்டுக்காரர் ஐந்தாவது வீட்டுக்கு தள்ள, எல்லாக் குப்பைகளும் சுற்றிச் சுற்றி, கடைசியில் முதலாவது வீட்டுகாரரின் வாசலுக்கு வந்து விடும்.

மறுநாள் காலை, அவர் மீண்டும் தனது வீட்டுக்கு வெளியே வருவார். ‘என் வீட்டு வாசலில் மட்டும் தினமும் இத்தனை குப்பை சேர்கிறதே!’ என்று ஆச்சரியப்பட்ட படி, மறுபடி சுத்தப்படுத்தும் பணியைத் தொடங்குவார்.

இந்த தினசரி களேபரத்தின் விளைவு, எந்தக் குப்பையும் அந்தத் தெருவை விட்டு நீங்குவதே இல்லை. நிறைய ஆசைகளோடு மரித்துப் போன ஆவியைப் போல, திரும்ப திரும்ப அங்கேயே தான் சுற்றிக் கொண்டிருக்கும். இது புரியாமல், எல்லோரும் விழுந்து விழுந்து சுத்தம் செய்து என்ன பிரயோஜனம்?

தொழிற்சாலைகள் அல்லது அலுவலங்களில் ‘செய்சோ’வைச் செயல்படுத்தும் போது, இந்த அபத்தம் நேர்ந்துவிடாத படி கவனமாக இருக்க வேண்டும். இதற்குச் சில எளிமையான உத்திகள் சிபாரிசு செய்யப்படுகின்றன.

சுத்தம் செய்யப்பட வேண்டிய பகுதியின் வரைப்படம் ஒன்றை எடுத்துக் கொண்டு, அதைத் தெளிவான கட்டங்களாகப் பிரிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பகுதியில் மொத்தம் எத்தனைப் பேர் பணிபுரிகிறார்கள் என்பதைப் பொறுத்துத் தான் இந்தக் கட்டங்களின் அளவை முடிவு செய்ய முடியும். குத்து மதிப்பாகச் சொல்வதனால், கட்டங்கள் ஒவ்வொன்றும் சுமார் இருப்பதைந்து சதுர அடி பரப்பளவில் இருக்கலாம்.

(தொடரும்)

## Electrode for Swimming Pool Chlorinator

